இனிமையான குழந்தைகளே! நினைவு யாத்திரைக்கு நேரம் கொடுக்கும் பொழுதுதான் விகர்மங்கள் விநாசம் ஆகும், அனைத்திலும் இருக்கக்கூடிய பற்றுதல்கள் நீங்கி விடும். தந்தையின் கழுத்து மாலையாக ஆகிவிடுவீர்கள்.

கேள்வி: இறை தந்தையின் மூலமாக குழந்தைகளாகிய நீங்கள் எந்த 2 வார்த்தைகளின் படிப்பை படிக்கின்றீர்கள்? அந்த இரண்டு வார்த்தைகளில் என்ன இரகசியங்கள் அடங்கி யிருக்கின்றன?

பதில்: ஏ, ஆத்மாக்களே! சரீர உணர்வை விடுங்கள் மற்றும் என்னை நினைவு செய்யுங்கள் - என்ற இரண்டு வார்த்தைகளின் படிப்பை இறை தந்தை கற்பிக்கின்றார். ஏனெனில் இப்பொழுது நீங்கள் இந்த பழைய உலகில் பழைய சரீரத்தை எடுக்கக் கூடாது. நீங்கள் புது உலகிற்குச் செல்ல வேண்டும். நான் உங்களை என் கூடவே அழைத்துச் செல்ல வந்திருப்பதால் தேகம் உட்பட அனைத்தையும் மறந்து கொண்டே செல்லுங்கள்.

பாடல்: நீங்களே தாயாகவும், தந்தையாகவும் இருக்கின்றீர்கள் .................

ஓம் சாந்தி! எந்த மனிதனின் மூலமாக எந்த சாஸ்திரங்களையும் நாம் கேட்கவில்லை என்பதை சாலிகிராம் குழந்தைகள் அறிந்திருக்கின்றீர்கள். இதனை சத்சங்கம் என்றும் கூற முடியாது. படிப்பு என்று கூறப்படுகின்றது. ஒருவேளை மனிதர்களிடத்தில் கேட்டால் நாம் சத்சங்கத்திற்கு செல்கின்றோம் அல்லது நாம் கல்லூரிக்குச் செல்கின்றோம் என்று கூறுவர். சத்சங்கத்தில் சாது, சந்நியாசி, வித்வான் போன்றவர்கள் கூறுபவர்களாக இருப்பர் என்பதை அறிந்திருக்கின்றீர்கள். பள்ளியிலும் மனித ஆசிரியர், விரிவுரையாளர் போன்றவர்கள் இருப்பர். இங்கு மனிதர் கிடையாது. இவர் எல்லையற்ற ஆன்மீகத் தந்தை. இவரையே நீங்கள் தாயாக வும், தந்தையாகவும் இருக்கின்றீர்கள் என்று மகிமைச் செய்கின்றீர்கள். இந்த மகிமை தேவதை களுக்கும் கிடையாது. பிரம்மா, விஷ்ணு, சங்கருக்கும் கிடையாது. இந்த மகிமை நிராகார பரம்பிதா பரமாத்மாவினுடையதாகும். நிராகார பரம்பிதா பரமாத்மா இந்த சரீரத்தில் பிரவேசமாகி தனது பாகத்தினை நடித்துக் கொண்டிருக்கின்றார். குழந்தைகள் அறிந்திருக் கின்றீர்கள். நிராகார பரம்பிதா பரமாத்மாவைத் தவிர வேறு யாரும் பிரம்மா குமார்- குமாரி களுக்கு கற்பிக்க முடியாது. பிரம்மாவையும் ஞானக்கடல் என்று கூறமுடியாது. இவரை பிரஜாபிதா என்று கூறுகின்றோம். ஞானக்கடல் என்று ஒரே ஒரு நிராகார பரம்பிதா பரமாத்மா வைக் கூறுகின்றோம். பதீதமானவர்களைப் பாவனமாக்கக்கூடியவர் அவரே. ஏனெனில் ஞானக் கடலின் மூலமாகவே சத்கதி ஏற்படுகின்றது. இது புதிய விசயமாகும். கீதையில் கிருஷ்ணரின் பெயரைப் போட்டதால் கண்டனத்திற்கு உள்ளாகி விட்டது. ஞானம் நிறைந்த பரம்பிதா பரமாத்மா வந்து ஞானம் கொடுக்கின்றார் என்பதை மனிதர்களுக்கு எப்படித் தெரியப்படுத்து வது? இதை மனிதர்கள் மறந்து விட்டனர். சாஸ்திரங்கள் போன்றவை துவாபர யுகத்தின் ஆரம்பத்திலிருந்தே உருவாக்கப்பட்டன என்று கிடையாது. முதலில் தந்தையின் சித்திரம், கோவில் போன்றவை உருவாக்கப்படுகின்றன என்று புரிய வைக்கப் படுகின்றது. அதன் மூலமாக பக்தி ஆரம்பமாகின்றது. பக்தியும் அதிக காலத்திற்கு பரமாத்மா விற்கு செய்ய வேண்டும். ஏனெனில் உயர்ந்ததிலும் உயர்ந்தவராக அவர் இருக்கின்றார். அவருக்கு பூஜை முதலில்

ஆரம்பமாகின்றது. பூஜைக்குத் தகுதியானவர் ஒரே ஒரு சிவன். பிரம்மா, விஷ்ணு, சங்கர் அல்லது ஜெகதம்பா, ஜெகத்பிதா பூஜைக்குத் தகுதியானவர்கள் என்று கூறமுடியாது. இவர்கள் அனைவரையும் பூஜைக்குத் தகுதியானவர்களாக ஆக்கக் கூடியவர் ஒரே ஒரு தந்தையாவார். அவரது பக்தியும் கண்டிப்பாக அதிகமாக இருக்கும். இவர் (பிரம்மா) ஒன்றுமே கிடையாது. இவரது உடலில் பரம்பிதா பரமாத்மா வரவில்லை யெனில் இவருக்கு எப்படி பூஜை நடைபெறும்? அனைவருக்கும் சத்கதி கொடுக்கும் வள்ளல் ஒரே ஒரு தந்தையாவார். இந்த ஞானச் சிந்தனை செய்ய வேண்டியிருக்கின்றது. பக்தி எப்படி ஆரம்பமாகும்? சிவபாபா ஞான சிந்தனை செய்வதில்லை. குழந்தைகள் ஞான சிந்தனை செய்ய வேண்டும். பிரம்மாவின் முகவம்சாவளியாக இருக்கக் கூடிய சரஸ்வதியும் ஞான சிந்தனை செய்ய வேண்டும். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் ஒருவரே. ஒரு வேளை அவர் வரவில்லையெனில் உலகை பதீதத்திலிருந்து பாவனமாக யார் ஆக்குவது? அனைத்து மனிதர்களும் பதீதமாக இருக்கின்றனர். சிவபாபா வரவில்லையெனில் சொர்க்கத்தின் ஆஸ்தி யார் கொடுப்பார்கள்? நிச்சய புத்தி யில்லை யெனில் வெற்றி மாலையில் வரமுடியாது. நல்ல குழந்தைகள் எப்பொழுதும் கழுத்து மாலையாக ஆவார்கள். தந்தையும் குஷியடைகின்றார் - இந்த குழந்தை மிக நல்ல, கட்டளைப்படி நடக்கக்கூடியவர். சில தாய் தந்தைகளுக்கு 12-14 குழந்தைகள் இருப்பார்கள். அதில் சிலர் கெட்டவர்களாகவும், சிலர் நல்லவர்களாகவும் இருப்பர். பதீதபாவன் தந்தையைத் தவிர பதீதமானவர்களை யாரும் முன்னேற்ற முடியாது. கங்கை நதிக்கரையில் கங்கா தேவியின் கோயில் இருப்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். இந்த கங்கா யார்? என்று புரிய வைக்க வேண்டும். பதீதத்திலிருந்து பாவனமாக்கக் கூடிய சக்தி இவரா? அல்லது தண்ணீரின் மூலமாக பாவனமா கின்றனரா? கங்கை பதீத பாவனி கிடையாது என்று தந்தை கூறுகின்றார். தந்தையின் நினைவு இல்லாமல் யாரும் பாவனமாக முடியாது. ஆகையால் நீங்கள் யாரும் கங்கையில் குளிக்க வேண்டாம். யோகா என்பதன் பொருள் நினைவு. புத்தியின் யோகம் செய்ய வேண்டும். அவர்கள் அதிகமான யோக ஆசனங்களை செய்விக்கின்றனர். அநேக விதமான ஹடயோகங்கள் செய்திருக்கின்றனர். அது யோகா என்று கூறப்படுவதில்லை. தாய்மார்கள்-அபலைகள் ஹடயோகத்தை எப்படி தெரிந்து கொள்ள முடியும்?

மனிதர்கள் பள்ளியில் படிக்கின்றனர். அதில் ஏமாற்றம் அடைவதற்கான விசயம் எதுவுமில்லை. ஏதாவது பரீட்சைகளில் தேர்ச்சி அடைகின்றனர். அந்த பரீட்சையில் தேர்ச்சி பெற்று இவ்வாறு ஆவேன் என்பதை அறிந்திருக்கின்றனர். இங்கும் நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள் இதுவும் பரீட்சையாகும். இறை தந்தை கற்பிக்கின்றார். அவர் பதீத பாவனராக இருக்கின்றார். உங்களது வாழ்க்கை இறை தந்தையின் மாணவ வாழ்க்கையாகும். தந்தை பதீதத்திலிருந்து பாவனமாக எப்படி ஆக்குகின்றார்? ஏ, ஆத்மாக்களே! இந்த சரீர உணர்வை விடுங்கள், இந்த சரீரத்தை விட வேண்டும் என்று கூறுகின்றார். முதன் முதலில் ஆத்மா, சரீரம் வெண்மையாக இருந்தது, இப்பொழுது இரும்பு காலமாகி விட்டது. இப்பொழுது நீங்கள் புது சரீரத்தை இங்கு எடுக்க முடியாது. ஏனெனில் இங்கு 5 தத்துவங்களும் தமோபிரதானமாக இருக்கின்றன. இப்பொழுது குழந்தைகளாகிய உங்களை நான் என் கூடவே அழைத்துச் செல்வேன். முந்தைய கல்பத்திலும் அழைத்துச் சென்றிருந்தேன். நான் காலனுக்கெல்லாம்

காலனாக இருக்கின்றேன். அனைவரை யும் திரும்ப அழைத்துச் செல்வேன். பிறகு உங்களை அமரபுரிக்கு அனுப்பி விடுவேன். இது மரண உலகம், சீசீ உலகமாகும். ஆகையால் சங்கமயுகத்திற்கு 100 ஆண்டுகள் தேவை. மற்ற ஒவ்வொரு யுகமும் 1250 ஆண்டுகள் ஏற்படுகின்றது. கடைசி இந்த சங்கம யுகத்தின் ஆயுள் மிகக் குறைவாகும். பிராமணர்களின் குடுமி சிறியதாக இருப்பது போன்று சங்கமயுகத்தின் ஆயுளும் சிறியதாகும். பிறகு இந்த உலகம் அழிந்துவிடும். புதிய கட்டிடங்கள் போன்றவை உருவாக ஆரம்பித்து விடும். அதில் முதலில் ஸ்ரீ கிருஷ்ணர் வருகின்றார். மாளிகை போன்ற வற்றை உருவாக்க ஆர்வமாகவும் அவர் இருக்கின்றார். சோமநாத் கோயிலை உருவாக்கி யிருப்பவரும் நல்ல ஆர்வமுள்ளவராக இருந்திருப்பார். பிர்லாவும் ஆர்வமுள்ளவராக உள்ளார். நல்ல கோயிலை கட்டியிருக்கின்றார். நம்பர் ஒன் பூஜ்ய நிலையில் சிவபாபா இருக்கின்றார். பிறகு பக்தி மார்க்கத்திலும் முதலில் சோமநாத் கோயில் உருவாகின்றது. அதுவும் சிறிது காலத்திற்குப் பிறகு உருவாகியிருக்கும். பிறகு பூஜை ஆரம்பமாகும். இப்பொழுது அடர்ந்த இருளாக இருக்கின்றது. இரவு முடிவடைந்து பிறகு பகல் வருகின்றது.

தந்தை கூறுகின்றார் - இரவு மற்றும் பகலுக்கு இடையில் நான் வருகின்றேன். மகா பாரத யுத்தமும் இருக்கின்றது. யாதவர்களின் வயிற்றிலிருந்து ஆயுதம் வெளி வந்தது அதன் மூலம் முழு குலமும் விநாசமாகிவிட்டது என்று எழுதப்பட்டிருக்கின்றது. விநாசத்திற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். யாராவது பிரேரணை கொடுப்பதாக நினைக்கின்றனர். இருவரும் விநாசத்திற்காக அணுகுண்டுகளை தயாரித்து வைத்திருக்கின்றனர். ஆபத்துக்களும் வர இருக்கின்றன. நீங்கள் நடைமுறை யில் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கின்றது, விநாசமும் எதிரில் இருக் கின்றது. யாராவது விநாசத்தை பார்க்கவில்லை யென்றாலும் வைகுண்டத்தை பார்க்கின்ற னரல்லவா? நல்ல முறையில் படித்து தந்தையிடமிருந்து முழு எல்லையற்ற ஆஸ்தியை அடைய வேண்டும். உங்களுக்கு கற்பிக்கின்றவர் சாகாரமானவரல்ல (சரீரம் உடையவர்). சாஸ்திரம் போன்றவற்றின் விசயங்கள் கிடையாது. இங்கு ஞானக்கடல் சுயம் கற்பிக்கின்றார். நீங்கள் உங்களை ஆத்மா என்று புரிந்து தந்தையை நினைக்கின்றீர்கள். பகவானின் மகா வாக்கியம் - தனது குழந்தைகளுக்காக, நான் குழந்தைகளாகிய உங்களது எதிரில் இருக்கின் றேன். எனது குழந்தைகளாக இருப்பவர்களிலும் சிலர் நேரடிக் குழந்தை களாகவும், சிலர் மாற்றாந்தாய்க் குழந்தைகளாகவும் இருக்கின்றனர். நேரடிக் குழந்தை களுக்கே ஆஸ்திக்கான உரிமை இருக்கின்றது. சந்தேக புத்தி உடையவர்கள் மாற்றாந்தாய் குழந்தைகள் என்று கூறப்படுகின்றனர். அவர்கள் ஆஸ்தியடைய முடியாது. பிறகு அவர்கள் முயற்சியின் படி பிரஜைகளாக சென்று விடுவார்கள். நேரடிக் குழந்தைகள் இராஜ்யத்தில் வருவார்கள். அவர்கள் பாபா மீது அன்பு செலுத்துவார்கள், பாபா அவர்கள் மீது அன்வு செலுத்துவார். தந்தை கூறு கின்றார் - என்னை நினைவு செய்தால் நான் உங்களுக்கு உதவி செய்வேன். தைரியமான குழந்தைகளுக்கு பகவான் உதவி செய்வார். மற்ற அனைவரிட மிருந்தும் புத்தியை நீக்கி ஒருவரிடத்தில் ஈடுபடுத்த வேண்டும். நாம் பாபா வினுடையவர்கள் என்று நீங்கள் கூறுகின்றீர் கள். இவையனைத்தும் பாபாவினுடையதாகும். பாபாவிற்கு நாம் அழுக்குகளைக் கொடுக் கின்றோம். பதிலுக்கு சொர்க்கத்தின் எல்லையற்ற இராஜ்யத்திற்கான ஆஸ்தியை அடை

கின்றோம். இந்த பழைய தேகத்தின் மீது நமது பற்றுதல் கிடையாது. இது தமோபிரதானமான நோயாளி சரீரமாகும். நம்மிடத்தில் வேறு என்ன இருக்கின்றது? மனிதர்கள் இறக்கின்றபொழுது அனைத்தையும் விட்டு விட்டுச் செல்கின்றனர். பிறகு அவருடைய அனைத்தையும் தோட்டிக்கு கொடுக்கப்படுகின்றது. நாம் அனைத்தையும் உங்களுக்கு கொடுக்கின்றோம். பற்றுதலை நீக்குவதற்காக நிரந்தரமாக பாபாவை நினைவு செய்வதற்கான முயற்சி செய்கின்றோம். பிறகு மாயை தடைபோடுகின்றது. ஆகையால் சிறிது சிறிதாக என் நினைவிற்கு நேரம் கொடுத்தால் விகர்மங்கள் விநாசமாகிவிடும். அவர் களே எனது கழுத்து மாலை ஆவார்கள். எவ்வளவு எளிதாகப் புரிய வைக்கின்றார்! தந்தை புரிய வைக்கின்றார் - நாடகப்படி இந்த இரதமும் எனக்கு நிச்சயிக்கப்பட்டுள்ளது. கடனாக எடுத்திருக்கின்றேன். வேறு யாருக்குள்ளும் நான் வரமுடியாது. நீங்களும் கூறு கின்றீர்கள் - பாபா, கல்பத்திற்கு முன்பும் நாங்கள் உங்களை இதே கட்டிடத்தில், இதே ஆடையில் சந்தித்திருந்தோம் மற்றும் உங்களிடமிருந்து ஆஸ்தி அடைந்திருந்தோம். ஆக எவ்வளவு எளிதாக இருக்கின்றது!

தந்தை கூறுகின்றார் - என் ஒருவனை மட்டுமே நினையுங்கள், வேறு எந்த பக்கமும் புத்தி செல்லக்கூடாது. கடைசி காலத்தில் குழந்தையின் நினைவு அல்லது வேறு யாருடைய நினைவும் வந்தால் பிறகு அங்கே பிறக்க வேண்டியிருக்கும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். எதிலும் பற்றுதல் இருக்கக்கூடாது கடைசி காலத்தில் யார் மனைவியை நினைக்கின்றார்களோ...... பதீதமானவர்களை பாவனமாக்குவதற்காக தந்தை வந்திருக் கின்றார். அவருக்கு எவ்வளவு மகிமை செய்கின்றனர்! ஏக் ஓங் கார்.... அவருக்கு ஒரே ஒரு பெயர் தான். பெயர் மாறுவதற்கு அவருக்கு வேறு எந்த சரீரமும் கிடைப்பதில்லை. நீங்கள் 84 பிறப்புகள் எடுக்கின்றீர்களெனில் பெயரும் 84 உள்ளன. தந்தையின் மகிமையில் பயமற்றவர், வெறுப்பில்லாதவர், ஆகால மூரத்... என்று பாடுகின்றனர். அவரே காலனுக் கெல்லாம் காலனாக இருக்கின்றார். அவரை காலன் ஒன்றும் செய்ய முடியாது. நான் அனைவரையும் முக்தி தாமத்திற்கு அழைத்துச் செல்வேன். நிர்வேர் - எனக்கு யாரிடமும் வெறுப்பு கிடையாது. அகால மூரத், அஜோனி - நான் பிறப்பு இறப்பில் வருவதில்லை. அவருக்கு எவ்வளவு மகிமை பாடுகின்றனர்! துக்கத்தை போக்கி சுகம் கொடுப்பவ.ர் என்றும் பாடப்பட்டிருக்கின்றது. கலியுகத்தின் துக்கத்தைப் போக்குகின்றார். சத்யுகத்தின் சுகத்தைக் கொடுக்கின்றார். பாரதத்தில் சத்யுக ஜீவன் முக்தி இருந்ததை குழந்தைகள் அறிந்திருக்கின்றீர்கள். மற்ற அனைத்து ஆத்மாக் களும் சாந்தி தாமத்தில் இருந்தனர், நினைவு வருகின்றதல்லவா! ஆக தந்தை சங்கமயுகத்தில் வந்தால் தான் அனைவரையும் சாந்தி தாமத்திற்கு அழைத்துச் செல்ல முடியும் மற்றும் உங்களை பிறகு சுகதாமத்திற்கு அனுப்ப முடியும். எவ்வளவு எளிய விசயம்! ஆனால் மாயை அப்படிப்பட்டது இங்கிருந்து வெளியில் சென்றதும் மறந்து விடுகின்றனர். கர்ப சிறையில் தர்மராஜரின் மூலம் உங்களுக்கு தண்டனையை கொடுக்கின்றபோது என்னை மன்னித்து விடுங்கள், மீண்டும் இந்த பாவத்தை செய்ய மாட்டேன் ஐயோ, ஐயோ என்று கூறுகின்றீர்கள். வெளியில் வந்ததுமே பிறகு மீண்டும் பாவம் செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். இது மாயையின் இராஜ்யமாக இருக்கின்றது. சத்யுகம் திரேதாயுகத்தில் மாயை இருக்காது. அங்கு சுகம் மட்டுமே இருக்கும். இப்பொழுது நீங்கள் படித்துக் கொண்டிருக்கின்றீர்கள் இதில் வீடு வாசலை

விடவேண்டிய விசயமில்லை. தந்தை கூறுகின்றார் - தேக சகிதமாக அனைத்தையும் மறந்த விடுங்கள். உங்களுடையது எல்லையற்ற சந்நியாசமாகும். அந்த சந்நியாசிகளுடையது எல்லைக்குட்பட்ட சந்நியாசமாகும். காட்டிற்குச் சென்று விட்டு பிறகு மீண்டும் நாட்டிற்கு திரும்பி விடுகின்றனர். எவ்வளவு பெரிய பெரிய பெயர்களை வைத்துக் கொள்கின்றனர்! தந்தை கூறுகின்றார் - நான் எவ்வளவு எளிதாகப் புரிய வைக்கின்றேன். வயதானவர்கள் எத்தனை பேர் உள்ளனர்! தாரணை ஏற்படுவதில்லை என்று கூறுகின்றனர். நல்லது. பரமாத்மா படிப்பிக் கின்றார் என்பதை அறிந்திருக்கின்றீர்களா? என்னை மட்டும் நினைவு செய்யுங்கள் என்று அவர் கூறுகின்றார். இதில் எந்த கஷ்டமும் கிடையாது. இப்பொழுது நாம் 84 பிறவி சக்கரத்தை முடித்திருக்கின்றோம் இதுவே சுயதரிசன சக்கரமாகும். ஆத்மாவிற்கு சக்கரத்தின் தரிசனம் ஏற்படுகின்றது. இங்கேயே நோயற்ற உடலுடையவர்களாக ஆகின்றீர்கள். சக்கரத்தை அறிந்து கொள்வதன் மூலம் நீங்கள் உயர்ந்த பதவி அடைவீர்கள். ஆகையால் பாபா கூறுகின்றார் - சுயதரிசன சக்கரதாரி ஆகுங்கள். எவ்வளவு எளிதாகப் புரிய வைக்கின்றார் - எளிய நினைவு, சிருஷ்டிச்சக்கரம், எந்த கடினமும் கிடையாது. இதுவே உண்மையான வருமானமாகும். மற்றபடி செல்வம் அனைத்தும் அழிந்து விடும், அனைத்தும் விட்டுப் போய்விடும். கடல் பொங்கி வரும். இயற்கைச் சீற்றங்களும் வரப்போகின்றன. பாரதம் சத்திய கண்டமாக இருந்தது, வேறு எந்த கண்டமும் இல்லை. பாரதம் சிவபாபாவின் பிறப்பிடமாகும். மிகப்பெரிய தீர்த்த ஸ்தானமாகும். பாரதத்தில்தான் சோமநாதர் கோயில் எவ்வளவு அழகாகக் கட்டப்பட்டிருக்கின்றது! இப்பொழுது மிக அதிகமாக உருவாக்கு கின்றனர்.

பாபா கூறுகின்றார் - இந்த நேரத்தில் திருமணம் என்பது முற்றிலும் வீண் இழப்பாகும். சிவபாபா விடத்தில் திருமணம் செய்வது முற்றிலும் இலாபமாகும். சிவபாபா பிரிய தரிசன மாகவும், இருக்கின்றார். சொர்க்கத்திற்கு அனுப்பி வைத்துவிடுவார். நீங்கள் இங்கு வந்திருக் கின்றீர்கள், நரனிலிருந்து நாராயணன், நாரியிலிருந்து இலட்சுமி ஆவதற்காக இங்கு வந்திருக் கின்றோம் என்பதை அறிந்திருக்கின்றீர்கள். ஆண்கள் ஆண்களாகத்தான் ஆவார்கள் என்பது கிடையாது. மாறிக் கொண்டேயிருக்கும். சில நேரம் ஆணுக்கான ஆடை (சரீரம்), சில நேரம் பெண்ணுக்கான ஆடை. பிறகு சத்யுகத்திலிருந்து திரேதாவாக எப்படி ஆகும் - அதுவும் புரிய வைக்கப் பட்டுள்ளது. இப்பொழுது குழந்தைகளாகிய உங்களுக்கு ஞானம் நிறைந்த இறை தந்தை படிப்பிக்கின்றார். மனிதர்கள் தந்தை, ஆசிரியர், சத்குருவாக ஆக முடியாது. அதிலும் அது உலகீயக் கல்வி, இந்த பாபாவோ ஒரேடியாக சொர்க்கத்திற்கு எஜமானர்களாக ஆக்குகின்றார். ஏதாவது விசயம் புரியவில்லையெனில் ஆயிரம் முறை கேளுங்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான வெகுகாலம் கழித்து காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாய், தந்தையான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) நல்ல கட்டளைப்படி நடக்கக்கூடியவர்களாகி வெற்றி மாலையில் வர வேண்டும். தந்தையிடத்தில் தனது பழையவைகளைக் கொடுத்து, தியாகம்

செய்து அனைத்திலும் இருக்கும் பற்றுதல்களை நீக்கி விட வேண்டும்.

2) கடைசி காலத்தில் ஒரு தந்தையின் நினைவு மட்டுமே இருக்க வேண்டும். அதற்காக மற்ற அனைத்திலிருந்தும் புத்தியை நீக்கி நிரந்தரமாக தந்தையின் நினைவில் இருக்கும் முயற்சி செய்யவேண்டும்.

வரதானம் : அனைத்து பொக்கிசங்களையும் தனக்குள் அடக்கி, மனம் தளர்ச்சி அடைந்த நிலை மற்றும் பொறாமையிலிருந்து விடுப்பட்டவராக இருக்கக்கூடிய சதா மகிழ்ச்சியானவர் ஆகுக.

பாப்தாதா அனைத்து குழந்தைகளுக்கும் சமமாக அனைத்து பொக்கிசங்களையும் கொடுத்திருக் கிறார், ஆனால் சிலர் அந்த பிராப்திகளை தனக்குள் வைத்திருக்க முடிவதில்லை மற்றும் தகுந்த நேரத்தில் செயலில் ஈடுபடுத்த முடிவதில்லை என்றால் வெற்றி தென்படுவ தில்லை, பிறகு தன்னிடமே மனம் உடைந்து போய்விடுகிறார்கள், எனது பாக்கியத்தில் இல்லை என்பது போன்று யோசிக்கிறார்கள், அவர்கள் மற்றவர்களின் விசே^த்தன்மைகள் மற்றும் பாக்கியத்தை பார்த்து பொறாமையை உருவாக்குகிறார்கள். அப்படிப்பட்ட மன முடைந்து போவது அல்லது பொறாமையில் வரக்கூடியவர்களால் ஒருபொழுதும் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. சதா மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்றால் இந்த இரண்டு விசயங்களிலிருந்து விடுப்பட்டவராக இருங்கள்.

சுலோகன்: சுயநலமில்லாமல் உண்மையான மனமுடையவராகி சேவை செய்யக்கூடியவர் தான் சுத்தமான ஆத்மா